**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| | | | ) | |
| Miscellaneous | .. | .. | ) | |
| | | | ) | **Sessions Case No. 123/2024** |
| Preliminary Register | .. | .. | ) | |
| | | | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW1** |
| | { | |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | அரவிந்த்பாபு |
| Father's Name | : | நடராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **17th day of November 2025.**

முதல் விசாரணை **:** நான் தற்போது விருதுநகர் அரசுமருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் விருதுநகர் அரசுமருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் 05.11.2021 ம் தேதி நிலைய

மருத்துவராக பணிபுரிந்து வந்தேன். அன்று நான் மாலையில் பணியில் இருந்தபோது அவசர சிகிக்சையில் இருந்த உதவி மருத்துவராக பணியில் இருந்த மருத்துவ எழில் என்பவர் என்னை தொடர்பு கொண்டு அன்று இரவு 7 மணியளவில் இருசக்கர வாகனத்தில் தானே தவறி விழுந்து காயம் ஏற்பட்டதாக கூறி குடிபோதையில் அவசர சிகிக்சை பிரிவில் சிகிக்சைக்கா வந்த முத்துகாத்தான் வயது 34, த/பெ சின்னாச்சாமி, சிவந்திபுரம் ஆத்திமேடு, விருதுநகர், அப்போது பணியில் இருந்த மருத்துவர் சதுர்வேதி என்பவர் அவரை பரிசோதித்து உள்நோயளியாக சிகிக்சைக்கு அனுமதித்தார். மேலும் காயத்தின் தன்மை குறித்தும், எடுக்கவேண்டிய பரிசோதனைகள் குறித்தும் மேற்படி நபரிடம் எடுத்துகூறியதாகவும், மேலும் அப்போது பணியில் இருந்த சிறப்பு மருத்துவரான மருத்துவர் எழில் மருத்துவர் திருநாவுக்கரசு மற்றும் மருத்துவர் உமா அவர்க் ளமேற்படி நபரை பரிசோதனை செய்து முதல்உதவி சிகிக்சை செய்து சிடி ஸ்கேன் எடுக்க பரிந்துறை செய்யதாக கூறினார். உடனே மேற்படி நபர் சிகிக்சைக்கு ஒத்துழைக்க மறுத்ததுடன் பணியில் இருந்த அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு பணியாளர்களை காது கூச கூடிய அளவு தகாத வார்த்தைகளை கூறி திட்டி மேலும் மேற்படி நபருக்கு இரத்தஅழுத்தம் பார்க்கும் கருவியை கொண்டு செவிலியர் பரிசோதனை செய்ய முயற்சிக்கும் போது செவிலியரை அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தும் தொடர்ந்து இடையூறு செய்தும் இரத்தம் அழுத்தம் பார்க்கும் கருவியை கீழே தட்டிவிட்டதில் சுமார் ரூ.2000/- மதிப்புள்ள அரசால் வழங்கப்பட்ட அரசு சொத்தான இரத்தம் அழுத்தம் பார்க்கும் கருவி கீழே விழுந்து இயங்காமல் சேதம் அடைந்து விட்டதாகவும், அப்போது பணியில் இருந்த காவலர் வருவதை பார்த்த மேற்படி நபர் அதிகமான குடிபோதையில் இருந்ததால் மருத்துவர்களுடன பிரச்சினை செய்துகொண்டு தன்னிச்சையாக சென்றுவிட்டதாகவும் கூறினார். நான் உடனே அவசர சிகிக்சை பிரிவுக்கு வந்து பணியில் இருந்த மருத்துவர்களிடமும், பணியாளர்களிடமும் விசாரித்து சேதமடைந்திருந்த நோயாளிகளுக்கு இரத்தம் அழுத்தம் பார்க்கும் கருவியை பார்த்தேன். பின்பு 06.11.2022 அன்று மதியம் பணியில் இருந்த அரசு

மருத்துவர்களை அவதூறாக பேசியும் , சிகிக்சைக்கு ஒத்துழைக்காமல் அரசு பணியை செய்யவிடாமல் தொடர்ந்து இடையூறு செய்த மற்றும் அரசு சொத்தை சேதப்படுத்திய மேற்படி முத்துகாத்தான் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டி புகார்மனுவை தயார் செய்து மருத்துவகல்லூரி மருத்துவமனை, பல்நோக்கு பணியாளர் அமீர்அபாஸ் என்பவர் மூலம் கொடுத்தனுப்பினேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலத்தை மடிக்கணினியில் பதிவு செய்தார்கள். நான் கொடுத்த புகார் மனு என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அது அ.த.சா.ஆ.**1.** என்னிடம் காண்பிக்கப்படும் இரத்தம் அழுத்தம் பார்க்கும் கருவியைதான் எதிரி உடைத்து சேதப்படுத்தினார். அது சா.பொ.**1.**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நீங்கள் விருதுநகர் மருத்துவமனையில் நிலைய அலுவலர் என்பதனால் அங்கு ஏதும் அசம்பாவிதங்கள் ஏதும் நடந்தால் அதனை விசாரித்து புகார் கொடுக்கவேண்டியது உங்களது கடமை என்றுசொன்னால் - சரிதான். விருதுநகர் மருத்துவமனையில் எப்போதும் காவலர்கள் பணியில் இருப்பார்கள் என்றால் - சரிதான். அதேபோல் அங்கு பணியில் இருக்கும் காவலர்களும் அசம்பாவிதம் நடந்தால் புகார் கொடுக்கவேண்டும் என்றால் - அவர்களும் புகார் கொடுக்கலாம். பொதுவாக Medico Legal வழக்குகளில் காயம்பட்ட நபர் சிகிக்சைக்காக வரும்போது அங்கு பணியில் இருக்கும் காவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுமா என்றால் - ஆம், AR பதிவு செய்ய வேண்டி தகவல் தெரிவிக்கப்படும். இந்த வழக்கிலும் AR பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எதிரி உள்நோயாளியாக சிகிக்சை பெற்றாரா என்றால் - உள்நோயாளியாக சிகிக்சை பெறுவதற்கு பரிந்துறைக்கப்பட்டது, ஆனால் அவர் அதற்கு முன்பே அவசர சிகிக்சை பிரிவில் மேற்படி சம்பவம் நடைபெற்றது. உள்நோயாளியாக அனுமதிப்பதற்கும், பரிந்துறை செய்வதற்கும் வித்தியாசம் உள்ளது என்றுசொன்னால் - சரிதான். நீங்கள் எதிரியை உள்நோயாளியாக அனுமதித்துவிட்டு வழக்கிற்காக பரிந்துரை செய்தோம் என்று பொய்சாட்சியம்

சொல்கிறீர்கள் என்றுசொன்னால் - அது தவறு. ஒரு நோயாளி அவசர சிகிக்சைக்கு வரும்போது முதல்நிலை பரிசோதனையாக இரத்தஅழுத்தம், சக்கரை அளவு, இதர பரிசோதனைகள் செய்யப்பட்டுவிட்டுதான் அனுமதிப்பார்கள் என்றால் - அந்த அந்த நோயாளியின் தன்மைகேற்ப மேற்கண்ட பரிசோதனைகள் மாறுபடும். அனைவருக்கும் பொதுவாக இரத்தஅழுத்தம் பார்த்துவிடுவீர்கள் என்றால் - சரிதான். நீங்கள் முதல்விசாரணையில் சொல்லியதுபோல் எதிரி வந்தார், இரத்த அழுத்த கருவியை தட்டிவிட்டார் உள்ளிட்ட சங்கதிகள் அனைத்தும் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றுசொன்னால் - சரிதான், எனக்கு அங்கிருந்த அவசர சிகிக்சை பிரிவு பணி மருத்துவர் விசயத்தை தெரியப்படுத்தினார். நீங்கள் உங்கள் புகார்மனுவில் மருத்துவர்களின் முன்னேயுள்ள உபகரணங்களை தூக்கி எறிந்து தாக்க முற்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றுசொன்னால் - சரிதான். அதற்கு மாறாக உங்களது முதல்விசாரணையில் இரத்தஅழுத்தம் பார்க்கும் கருவியை கொண்டு செவிலியர் பரிசோதனை செய்ய முயற்சிக்கும் போது செவிலியரை அரசு பணியை செய்யவிடாமல் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றுசொன்னால் - சரிதான். அதேபோல் உங்களது புகார்மனுவில் என்ன குறிப்பிட்டு அசிங்கமான வார்த்தை சொல்லி திட்டினார் என்று நீங்கள் சொல்லவில்லை என்றுசொன்னால் - சரிதான். சம்பவம் நடைபெற்று 19 மணிநேரம் காலதாமதமாகதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் - சரிதான். ஏன் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை போலிசார் விசாரணையிலும், முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளீர்களா என்றால் - அதுகுறித்து ஞாபகம் இல்லை. அதேபோல் உங்களது புகாரிலும், விசாரணையிலும் அரசு சொத்துக்கு நெருப்பினாலும், வெடிபொருட்களினாலும் சேதப்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் - இலலை. ஒரு நபர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருக்கும்போது அவர்களுக்கு Discharge summary கொடுக்கப்பட்டுதான் வெளியே அனுப்பப்படுவார் என்றால் - சரிதான். அதேபோல் ஒரு நபர் உள்நோயாளியாக சிகிக்சைபெற்று கொண்டு

இருக்கும்போது தானாக சிகிக்சையிலிருந்து சென்றுவிட்டார் அதுகுறித்து காவல்துறையினருக்கு தகவல் கொடுப்பீர்கள் என்றுசொன்னால் - சரிதான், Medical legal வழக்குகளில் அவ்வாறு செய்வோம். CT Scan எடுப்பதற்கு மருத்துவமனையில் குறைந்தபட்ச கட்டணம் செலுத்தப்படுகிறது என்றால் - சரிதான். நீங்கள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று பார்த்தபோது இரத்த அழுத்த கருவி உடைந்து கிடந்ததை பார்த்தீர்கள் என்றும், யார் உடைத்தார்கள், எவ்வாறு உடைக்கப்பட்டது என்ற விசயங்களை நேரடியாக பார்க்கவில்லை என்றுசொன்னால் - நான் சொல்ல கேள்விபட்டேன். பொதுவாக மருத்துவ கருவிகள் வேலை செய்யும் பணியாளர்களால் கவனக்குறைவாகவோ தவறுதலாகவோ உடைக்கப்பட்டால் அதற்கு நஷ்டஈடு வசூலிப்பீர்கள் என்றம், தொடர்ந்து அவ்வாறு செய்தால் பணிநீக்கம் செய்வீர்கள் என்றுசொன்னால் - அது சரியல்ல. Intention செய்தால் அதற்கு ஒரு மாறியும், கவனக்குறைவாக செய்தால் அதற்கு ஒரு மாறியும் நடவடிக்கை எடுப்போம். உங்களது மருத்துவமனையில் உடைந்த இது போன்ற இரத்த அழுத்த கருவிகள் ஒரு அறையில் சேமித்து வைக்கப்படும் என்றுசொன்னால் - சரிதான். இந்த சான்றுபொருளை பார்க்கும்போது இது சம்பவத்தில் உடைந்ததா அல்லது அந்த இரத்த அழுத்த கருவி சேமித்து வைக்கப்படிருக்கும் அறையில் இருந்ததா என்று உங்களால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் - எனக்கு அதுகுறித்து ஞாபகம் இல்லை. அவரச சிகிக்சை பிரிவு CCTV உள்ளதா என்றால் - தற்போது உள்ளது, அப்போது இருந்ததா இல்லையா என்று தெரியவில்லை. 2021 ல் சம்பவம் நடைபெற்ற பொழுதும், தற்பொழுதும் அவசர சிகிக்சை பிரிவு மேற்கண்ட புதிய கட்டிடத்தில்தான் செயல்பட்டு வருகிறது என்றால் - தற்போது இருந்தது, முன்பு இருந்ததா இல்லையா என்று ஞாபகம் இல்லை. பணியாளர்களின் கவனக்குறைவால் மருத்துவ உபகரண கருவி உடைந்ததற்கு கணக்கு காண்பிக்கவேண்டும் என்று எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. CCTV பதிவுகளை தாக்கல் செய்தால் உண்மைநிலவரம் தெரிந்துவிடும் என்றும் CCTV இல்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. நீங்கள்

சம்பவம் நடைபெற்றது குறித்து தெரியாமல் மருத்துவர்களிடம் விசாரணை செய்து புகார் கொடுத்திருந்தால், புகார் சரியான முறையில் இருந்திருக்கும் என்றும், அவ்வாறு இல்லாதனால்தான் முன்னுக்குபின் முரணாக தகவலுடன் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**